**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.</u>**

**முன்னிலை : செல்வி.எஸ். ஆக்னஸ் ஜெப கிருபா, எம்.எல்.,**

நீதித்துறை நடுவர், திருவையாறு.

**2026–ம் வருடம் ஏப்ரல் மாதம், 8–ம் நாள், புதன்கிழமை**

**<u>Cr.M.P.No.58/2026</u>**

சுரேஷ்குமார், வயது 48/2026,
த.பெ. கலியமூர்த்தி,
எண்.17, பதினைந்து மண்டபம் தெரு,
திருவையாறு தாலுக்கா,
தஞ்சாவூர் மாவட்டம். ... மனுதாரர்/எதிரி/வாகனத்தின் உரிமையாளர்

//எதிர்//

அரசுக்காக காவல் ஆய்வாளர்,
தோகூர் காவல் நிலையம்.
குற்ற எண்.41/2025 ...எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனுவானது மனுதாரரால் பிரிவு 503 & 497 BNSS–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு 08.04.2026 இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் இரண்டாம் நிலை அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R. பார்த்தசாரதி, B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**<u>உத்தரவு</u>**

இவ்வழக்கில், கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்தினை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவும், அதை மனுதாரருக்கு இடைக்கால பொறுப்பில் கொடுக்கவும் உத்தரவிடக்கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) மனுதாரர் இவ்வழக்கில் எதிரி ஆவார். மனுதாரர்/எதிரி/வாகன உரிமையாளரின் **TN 49 CJ 4955** என்ற பதிவெண் கொண்ட **Ashok Leyland LTD** வாகனத்தை காவல் துறையினர் இவ்வழக்கில் கைப்பற்றியுள்ளதாகவும், மனுதாரர் மட்டுமே வாகனத்தின் உரிமையாளர் என்றும், மேற்படி வாகனம் வெயிலிலும், மழையிலும் இருப்பதால் அதனுடைய மதிப்பு வீணாகும் என்றும், மேற்படி வாகனத்தின் மீது வேறு யாருக்கும் உரிமை கிடையாது எனவும், மேற்படி வாகனத்தை மனுதாரருடைய வசம் இடைக்கால பாதுகாப்பில் ஒப்படைக்குமாறும் மனுதாரர்/வாகன உரிமையாளர் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) அரசு தரப்பில் எழுத்துப்பூர்வ ஆட்சேபனை எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அரசு தரப்பில், இவ்வழக்கின் புலன் விசாரணை இன்னும் முடிவடையவில்லை என்றும், இம்மனுவை அனுமதித்தால் வழக்கு விசாரணையின்போது, வாகனத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்கமாட்டார் என்றும் வாதம் செய்தார்.

3) புலன் விசாரணை அதிகாரி கைப்பற்றிய வழக்குச் சொத்தை சி.பி.எண்.209/2025–ன் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார். வழக்கு சொத்தை காவல் நிலைய பராமரிப்பில் வைக்க உத்தரவிடப்பட்டதன்பேரில் வழக்குச் சொத்து தற்போது காவல் நிலைய பராமரிப்பில் உள்ளது.

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.04.08 19:41:18 +0530

4) இருதரப்பு வழக்கு ஆவணங்களும், வழக்கு கோப்புகளும் பரிசீலிக்கப்பட்டது. மனுவில், Ashok Leyland Ltd., என்று குறிப்பிடப்பட்டுள்ளது. படிவம்–91–ல் Ashok Leyland Dosth என்று குறிப்பிடப்பட்டுள்ளது. RC புத்தகத்தில் Makers Ashok Leyland Ltd., Model Dost என குறிப்பிடப்பட்டுள்ளது இந்நீதிமன்றத்தால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின்படி, மனுதாரர் வாகனத்தின் சட்டப்படியான உரிமையாளர் என்பதை கருத்தில் கொண்டும், மேற்படி இந்த வாகனம் வெயிலிலும், மழையிலும் இருந்தால் அதனுடைய மதிப்பு குறையும் என்பதை கருத்தில் கொண்டும், நீதியின் நலன் கருதியும், மேற்படி மனுதாரருக்கு கீழ்கண்ட நிபந்தனையின் பேரில் வாகனத்தினை இடைக்காலமாக மனுதாரர் வசம் ஒப்படைக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**நிபந்தனைகள்:–**

1. மனுதாரர் வாகனத்தின் நான்குபுறமும் நன்றாக தெரியும் வகையில், மனுதாரர் செலவில் தலைமை எழுத்தர் முன்னிலையில் புகைப்படம் எடுத்து குறுந்தகட்டுடன் (CD), பஞ்சநாமா தயாரித்தும் நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும்.
2. ரூ.5,00,000/–த்திற்கு இரண்டு பிணையதாரர்கள் பிணையபத்திரம் எழுதித்தர வேண்டும்.
3. வாகனத்தினை இந்நீதிமன்றம் உத்தரவிடும்போது திரும்ப இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும்.
4. மேற்படி வாகனத்தினை விற்கவோ அல்லது உருமாற்றம் செய்யவோ வேறு எந்த குற்றச்செயல்களில் ஈடுபடுத்தவோ கூடாது.
5. வாகனத்தின் அசல் RC புத்தகத்தை நீதிமன்றத்தில் மனுதாரர் ஒப்படைக்க வேண்டும்.

**முடிவாக,**

(1) **மேற்கண்ட நிபந்தனைகளின்படி மனுதாரர் மனுசொத்தை இடைக்காலமாக பெற்றுக்கொள்ளலாம் என உத்தரவிடப்பட்டு இம்மனு அனுமதிக்கப்படுகிறது.**

**(2) மனுதாரர் பிணையப்பத்திரம் எழுதி கொடுத்த உடன், இந்த உத்தரவின் நகலை காவல்துறைக்கு உடனடியாக அனுப்ப வேண்டும் என்றும் உத்தரவை பெற்றவுடன் காவல் துறையினர் வழக்கு சொத்தை மனுதாரருக்கு கொடுக்க வேண்டும் என்றும் இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கி சரிசெய்யப்பட்டு, இன்று **2026–ம்** ஆண்டு **ஏப்ரல்** மாதம் **8–ம்** நாளான இன்று அவையறியப் பகரப்பட்டது.

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.04.08 19:41:23 +0530

(ஒம்/–)

நீதித்துறை நடுவர்,
திருவையாறு.